

OFFICE OF THE CURATOR
RECEIVED
GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY
74507

# தேனோலை

பதிப்பாசிரியர்:
கொடுமுடி சண்முகப் பிரகதம்



10

1976 அக்டோபர்

புத்துணர்வு பெற்ற புதுமை மிகு நாடு—1975-76

# கறுப்புப் பண வேட்டை தொடரும்

- கடத்தல்காரர்களின் ரகசிய சாம்ராஜ்யம் தகர்த்தெறியப்பட்டது. கடத்தல் மன்னர்கள் என்று கருதப்பட்டவர்கள் யாவரும் கம்பி எண்ணுகின்றனர். தலை மறைவாய்த் திரியும் 42 கடத்தல் புள்ளிகளின் சொத்து பறிமுதல் செய்யப்பட்டு விட்டன.

- நகர்ப்புறக் காலி மனைகட்கு உச்சவரம்பு. இந்த உச்சவரம்புக்கு உட்பட்ட சொத்துக்கள் பரிவர்த்தனைக்குத் தடை.

- குடியிருப்பு மனைகளுக்கு உச்சவரம்பு. வரி ஏய்ப்பு செய்பவரைச் சிறையிலிட ஆடம்பர வீடுகளின் மதிப்பு மறுபரிசீலனை. வரி ஏய்ப்பு திடீர் சோதனைகளைத் தொடர்ந்து 1975 ஜூலையிலிருந்து மட்டும் நேர்முக வரி வசூல் மூலம் 27.4 சதவீதம் கூடுதல்.

- "வாலண்டரி டிஸ்குளோசர்" திட்டத்தின்கீழ் 2,50,000 பேர் ரூ. 15,870 மில்லியன் வருமானம் சொத்து போன்றவற்றை அறிவித்துள்ளனர். இதிலிருந்து வரியாக ரூ. 2,490 மில்லியன் கிடைத்துள்ளது.

# தொல்லெழுத்துக்களில்
# கோவை மாவட்டம்

பதிப்பாசிரியர் :
கொடுமுடி சண்முகப் பிரகதம்

விலை ரூ. 1-00

தேனோலை
பத்தாம் இதழ் — அக்டோபர் 1976

ஆண்டுச் சந்தா ரூ. 4/-

அனுப்ப வேண்டிய முகவரி :

ச. பிரகதம்
4/11. 2வது சடைய படையாச்சி தெரு
வேலூர் ரோடு
திருச்செங்கோடு 637211

எழுத்துச் சீர்மை :

1. உகர ஊகார உயிர்மெய்களுக்குப் பக்கக்குறி இடுதல்
2. உயிர் நெடில்களுக்குக் கால் வாங்குதல்

சிட்டனைச் சிவனைச் செழுஞ் சோதியை
அட்ட மூர்த்தியை ஆல நிழலமர்
பட்டனைத் திருப் பாண்டிக் கொடுமுடி
நட்டனைத் தொழ நம்வினை நாசமே.


**தேனோலை**

அச்சிட்டவர் :
நாரா. நாச்சியப்பன்
நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்,
சென்னை-600014.

வெளியிட்டவர் :
ச. பிரகதம் சென்னை-20.

# கோவை மாவட்டம்

இந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்குமளவுக்குத் தொழில் வளம் சிறந்தது கோவை நகரம். தொன்று தொட்டு வளர்ந்து வரும் பருத்தித் தொழில் இன்று புதுமைப் பொலிவுடன் திகழ்கின்றது. பருத்தி, நூல் பற்றிய ஆராய்ச்சி நிலையம் உள்ளது. மூன்று பொறியியல் கல்லூரிகள், மூன்று பன்னுட்பியக் கல்லூரிகள், வேளாண்மைப் பல்கலைக் கழகம், மருத்துவக் கல்லூரி, வனக் கல்லூரி, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, தமிழ்க் கல்லூரி, கலைக் கல்லூரிகளுடன் தன்னிறைவு பெற்று முதன்மை பெற்றுத் திகழ்கின்றது. கோவை மாவட்டம் முழுவதும் தொழில் மயமாகியுள்ளதென்றால் மிகையாகாது. இம் மாவட்ட மக்கள் முயற்சியுடையார் என்பது உலகறிந்த உண்மை.

தொன்மைச் சிறப்பிலும் கோவை மாவட்டம் முன்னிற்கின்றது. அதன் வரலாற்றைச் சுருக்கமாகக் கூறி, பொறுக்கு மணியான சில கல்வெட்டுகளையும், ஓலைச் சுவடிகளையும் அறிமுகப்படுத்துவதே இச் சிறு நூலின் நோக்கம்.

பண்டைத் தமிழகம் சேர, சோழ, பாண்டிய, தொண்டை, கொங்கு நாடுகளாகப் பிரிந்திருந்தது. முதல் மூன்றும் பேரரசுகள். தொண்டை நாடும் பல்லவப் பேரரசால் பெருமையுற்றது. கொங்கு நாடு அவ்வப்போது அடுத்துள்ள பெரிய நாட்டோடு இணைந்திருந்தது. குறுநிலத் தலைவர்களின் ஆட்சியில் எந்தக் காலத்திலும் குழப்பமேதுமின்றி அமைதியாக இருந்தது.

சங்க காலத்தில் சேரர்களின் ஆட்சி இப்பகுதியில் இருந்தது. சேரர்களின் ஒரு பிரிவினர் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர். இராசராசபுரம் எனப்பட்ட தாராபுரமும், வஞ்சி என்ற பெயருடன் சில நாட்கள் தலைநகராக இருந்துள்ளது. கடையெழு வள்ளல்களுள் சிலர் இங்கு வாழ்ந்துள்ளனர்.

குமணன் அவர்களுள் ஒருவன், காங்கயத்தின் அருகில் உள்ள ஆனூர் என்ற பழைய கோட்டையில் கொடுமுடி என்ற தலைவன் ஆண்டுள்ளான். பின்னர் பல்யானைச் செல்கெழுகுட்டுவனால் அழிந்தான்.

சென்னிமலை, கொடுமுடி, தாராபுரம் போன்ற பழமை மிகு ஊர்கள் சங்கப் பாடல்கள் பெற்றுள்ளன. புலவர்களும் புரவலர் களும் மலிந்துள்ளனர்.

சங்க காலத்தை அடுத்து பல்லவர், பாண்டியர் போர் அடிக்கடி நிகழ்ந்துள்ளது. கொங்குத் தலைவர்கள் அவ்வப் போது ஒருவருடன் சேர்ந்து மற்றவருடன் போராடியுள்ளனர். சிலர் அழிந்து போயினர். சிலர் வென்று விருதுகள் பெற்றுள்ளனர். வேள்விக் குடிச் செப்பேடு, சின்னமனூர்ச் செப்பேடு, பல்லவர் கல்வெட்டுக்கள் இச்செய்திகளை அறிவிக்கின்றன.

அடுத்து உலக முழுதும் ஒரு குடைக் கீழாண்ட சோழர்கள் ஆட்சி கொங்கு நாட்டிலும் நிலவியது. இராசராசன் முதலான பல சோழ மன்னர்களின் நேரடி ஆட்சியில் திகழ்ந்தது.

இக்கால கட்டத்தில் முக்கியமான சமுதாய மாற்றம், பசுமைப் புரட்சி முதலான நிகழ்ந்துள்ளன. தொண்டை நாட்டு வேளாண் குடி மக்கள், சோழநாடு வழியாக கொங்கு நாட்டில் குடியமர்ந்து காடு திருத்திக் கழனி வளம் கண்டனர். சோழன் பூர்வ பட்டயம், மதுக்கரைப் பட்டயம், 24 நாட்டுப் பட்டயம் நடுகற்கள் பல இச் செய்திகளை உறுதிப்படுத்துகின்றன. கங்கையும், கடாரமும் கொண்ட இராசேந்திர சோழன் கால நடுகல் கொடுமுடிக் கடுத்துள்ள வடிவுள்ள மங்கலத்தில் கிடைத்துள்ளது. மற்றும் பழமங்கலம் நடுகல், தலையநல்லூர் நடுகல் முதலியன பூர்வ குடியினருக்கும் புதுக் குடியினருக்கும் நடந்த போர்ச் செய்திகளைப் புலப்படுத்துவன.

அடுத்து பாண்டியர்களின் ஆட்சி பரவியது. பாண்டியர்கள் சோழர்கள், ஆகியோரின் பிரதிநிதிகளாக இருந்தோர் பின்னர் தனியாட்சி செலுத்தத் தொடங்கினர். அவர்களைக் கொங்கு பாண்டியர், கொங்குச் சோழர் என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பர்.

அடுத்து விஜயநகர மன்னர்களின் ஆட்சி தமிழகம் முழுவதும் பரவியது. கொங்கு நாடும் விதிவிலக்கல்ல. மைசூர் மன்னர் களான திப்பு சுல்தான் ஆட்சி தொடர்ந்தது. இறுதியாக

ஆங்கிலேயக் கம்பெனி ஆட்சியும், மாட்சிமை தங்கிய இங்கிலாந்து மாமன்னர் ஆட்சியும் தொடர்ந்தது.

பின்னர் விடுதலைப் போர் வெடித்து, சுதந்திர பாரதம் உருவாயிற்று. பாரதத்தின் மேல் நிதியமைச்சர் சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியார் இம்மாவட்டத்தினரே. இன்றைய நிதியமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்களும் இம்மாவட்டத்தினரே.

வரலாற்று உலகிற்கு கொங்கு நாட்டை அறிமுகப் படுத்தியவர்களில் தலையாய மக்கள் சிலருண்டு; கோவைக் கிழார் இராமச் சந்திரஞ் செட்டியார், துடிசைக் கிழார், பாண்டாரகர் மு. ஆரோக்கியசாமி முதலானோர். அண்மையில் காலஞ்சென்ற வேலம்பாளையம் தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்கள் பல ஓலைச் சுவடிகளைத் தேடித் திரட்டிப் பாதுகாத்து வைத்துள்ளார்கள். பல சிற்றிலக்கியங்கள் இதுவரை வெளியாகியுள்ளன. பண்டை இசை நூலான "பஞ்ச மரபு" இவரது பணிகளுள் தலையாயது. அண்மைக் காலத்தில் தொல்லியல் துறை இயக்குநராக உள்ள பண்டாரகர் இரா. நாகசாமி அவர்களும் இம்மாவட்டத்தினரே. கல்லூரியில் படித்தது வடமொழி இலக்கியம். ஆனால் எல்லா நாளும் படிப்பது சங்க இலக்கியம், பல பாடல்கள் மனப்பாடம் அதிலுள்ள வரலாற்றுச் செய்திகளைக் கல்வெட்டுடன் பொறுத்த உறுதி செய்வது இவரது தனித்திறன். திறமையுள்ள இளைஞர்கள் பலர் குடத்துக்குள் விளக்காக இருந்தபோது, அவர்களைக் குன்றின் மேல் ஏற்றி வைத்த பண்பாளர். ஆராய்ச்சித் திறனும் முயற்சியுமுடைய பலருக்கு, மேடை அமைத்து, வாய்ப்பளித்து, தொல்லியல், தொல்லெழுத்தியலில் பயிற்சியுமளித்து உலகிற்கீந்தவர். அவ்வாறு முன்னணிக்கு வந்தோரில் புலவர் செ. இராசுவும் இக்கட்டுரையாசிரியரும் குறிப்பிடத்தக்கவர்.

புலவர் செ. இராசு இளைஞர், ஓடியாடி அலைந்து செய்திகளைத் திரட்டித் தருவார். கோவை மாவட்டத்தில் பல கல்வெட்டுகள் அவரளித்த செய்தியால் வெளியானவையே. கவிஞர், பேச்சாளர். அவரது தந்தி முகவரியே: கல்வெட்டு, ஈரோடு. கல்லெழுத்துக்களை நேரில் படித்துக் கூறும் திறன் இவர் பெற்ற திரு. இவரது ஆற்றல் இன்னும் முழுவதும் பண்படுத்தப்படாமல், காட்டில் காய்ந்த நிலாவாக உள்ளது.

கொங்கு நாட்டு மூலச் செய்திகளை அண்மைக் காலத்தில் உலகிற்களித்த வரலாற்று ஏடுகள் இரண்டு. ஒன்று கொங்கு — திங்களிதழ். அடுத்தது தேனோலை—காலாண்டிதழ். அரைத்த

மாவை அரைக்காமல், புதிய செய்திகளை உலகிற்கு அளிக்கின்றன. தேனோலையில் இதுவரை பல புதிய பட்டயங்கள், கல்வெட்டுக்கள், இலக்கியங்கள் வெளியாகியுள்ளன. இவை தரமான ஆராய்ச்சியாளர்களுக்கு உதவுகின்றன.

வரலாற்று ஆர்வம் மிகுந்த இந்த நாளில் மாணவர்கள் பலர் இத்துறையில் ஆர்வம் கொள்ள வேண்டும். ஏராளமாகப் படிக்க வேண்டும். கடுமையாக உழைக்க வேண்டும். இன்று புகழோடும், பெருமையோடும் இருப்பவர்கள் எல்லாம், மற்றவர்கள் தூங்கும்போதும், ஓய்வு கொள்ளும்போதும், கடுமையாக உழைத்தவர்கள் என்பதை உணர வேண்டும். உழைப்பே உயர்வு தரும். சட்டியிலிருந்தாலே அகப்பையில் வரும் என்ற நம் நாட்டுப் பழமொழிக் கேற்ப, அறிவுத் திறனைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

வரலாற்று ஆவணங்கள், கல்வெட்டுக்கள் பல இன்னும் வெளிவராமல் உள்ளன. அவற்றைத் தேடிக்கண்டு பிடித்து, வெளியிடுவோம். நமது முந்தைய வரலாற்றை அறிவோம். அறிவிப்போம்.

இந்நூலின் கடைசியில் உள்ள கிரையப்பத்திரம் புத்தம் புதிய செய்தி, இன்னும் செய்தி ஏடுகளில் வரவில்லை. ஆங்கில அரசின் முத்திரை ஓலையில் இருப்பதே அதன் சிறப்பு.

# நாட்டுப் பிரிவு

கொங்கு நாடு 24 நாடுகளாகப் பகிர்ந்துள்ளது. அதில் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவை 15. அவைவருமாறு :

## கோவை மாவட்டம்

| | |
|---|---|
| பூந்துறை நாடு | (ஈரோடு, சென்னிமலை) |
| தென்கரை நாடு | (ஊதியூர், மூலனூர்) |
| காங்கேய நாடு | (காங்கயம், வெள்ளகோயில்) |
| பொன்கலூர் நாடு | (பொங்கலூர், குண்டடம்) |
| ஆறை நாடு | (சேவூர், கோவை) |
| வாரக்க நாடு | (நெகமம், செஞ்சேரி) |
| மண நாடு | (சின்னத்தாராபுரம்) |
| அரைய நாடு | (கொடுமுடி, சிவகிரி) |
| ஒடுவங்க நாடு | (சத்திய மங்கலம்) |
| வடகரை நாடு | (பவானி, ஆப்பக் கூடல்) |
| நல்லூருக்க நாடு | (உடுமலை) |
| காவடிக்க நாடு | (பொள்ளாச்சி) |
| ஆனைமலை நாடு | (ஆனைமலை, வேட்டைக்காரன் புதூர்) |
| காஞ்சிக்கோயில்நாடு | (பாரியூர், கவுந்தப்பாடி) |
| குறுப்பு நாடு | (ஊத்துக்குழி, திங்களூர்) |

# எழுத்துப் புணருத்தான்

ஈரோட்டிலிருந்து சென்னிமலை செல்லும் பாதையில் அமைந்துள்ளது அறச்சலூர். இங்கு நெடிது வளர்ந்துள்ள மலை ஒன்றுண்டு. நாகமலை என்றழைப்பர், அதன் வடசரிவில் ஒரு பாலியும், குகைத்தளமும் உண்டு. அங்கு தரையில் புகழ் மிக்க மூன்று கல்வெட்டுக்கள் உள்ளன.

**முதல் கல்வெட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| த | தை | தா | தை | த |
| தை | தா | தே | தா | கை |
| தா | தே | தை | தே | தா |
| தை | தா | தே | தா | தை |
| த | தை | தா | தை | த |

**இரண்டாம் கல்வெட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| கை | த | தை | த | கை |
| த | தை | [த] | தை | த |
| தை | த | தை | த | தை |
| த | தை | [த] | தை | த |
| [கை | த | தை | த | கை] |

**மூன்றாம் கல்வெட்டு**

இரண்டு வரிகளால் ஆன இத்தொடரை அறிஞர்கள் பலவிதமாக வாசிக்கின்றனர். அவை :

**திரு. நா. இராமச்சந்திரன்**

எழுத்தும் புணர்த்தான் மணிய
வண்ணக்கன் ஆதன் சாத்தன்

**பேரா. மகாலிங்கம்**

சித்தம் தீத்தம் பூண தந்தான்

**ஐராவதம் மகாதேவன்**

ஏழு தானம் பண்வித்தான் மணிய
வண்ணக்கன் தேவன் சாத்தான்

**மத்திய தொல்லியல் துறை**

எழுத்துப் புணருத்தான் மணிய்
வண்ணக்கன் தேவன் சாத்தான்.

இக்கல்வெட்டு சிலப்பதிகார காலத்திற்குச் சமமானது. முதலிரண்டு கல்வெட்டுக்களும், இசை வகையைச் சேர்ந்தன. அவற்றைக் கோத்தவன் தேவன் சாத்தன் என்பவன். அவன் மணிகளைச் சோதித்து தரம் காணும் திறமுடைய தொழிலாளி.

இக்கல்வெட்டினை காடு மேடெல்லாம் அலைந்து முதலில் கண்டு பிடித்துக் கூறியவர் புலவர் செ. இராசு அவர்கள். ஈரோட்டுக்கு வருகிற அறிஞர்களை யெல்லாம் வலிந்து அழைத்துச் சென்று காட்டி வந்தார். தொல்லியல் துறைகளுக் கெல்லாம் அறிவித்து பாராட்டுகளைப் பெற்றார்.

இதே ஊரில் இன்னொரு புதுமையான கல்வெட்டினையும் புலவர் இராசு கண்டு பிடித்துள்ளார். அறச்சாலை அம்மன் கோயிலின் வாயிற்படிக்கு போட்டுக் கட்டப்பட்டுள்ளது. அண்மையில் உள்ள சிவன் கோயில் புதுக்கிய போது, தனியாக விடப்பட்ட கல் வாயிற்படிக்கு வந்து விட்டது. அதில் புதுமை என்ன? நீங்களே பாருங்கள்:

(ள......
வல்லா)
கவீர
ஞ் சிறக்
ங் கல
நன்ம
ன்மம்
ண்டத
யன்க
லவரா
......(பல்)

இதைப் படிக்க முடியவில்லையா? இப்போது முயலுங்கள் தலை கீழாக.

பல்லவராயன் கண்ட தன்மம்
நன்மங்கலஞ் சிறக்க வீர வல்லாள......

(இக்கல்வெட்டு இதுவரை வெளியிடப்படவில்லை.)

இதுபோல கீழிருந்து மேலே எழுதிய கல்வெட்டு, அருமை யன்றோ?

# இராச கேசரிப் பெருவழி

கோவை மாநகருக்கு அருகில் உள்ளது சுண்டக்கா முத்தூர். அதிலிருந்து 5 கிலோ மீட்டர் தென்மேற்கில் "பச்சப் பள்ளி" என்ற இடம் உள்ளது. அங்குள்ள மலைத் தொடரில் ஒரு கணவாய் உள்ளது. அது செயற்கையாக வெட்டி உருவாக்கப் பட்ட நெடுஞ்சாலை அதனை அமைத்தவன் தமிழ வரலாற்றில் நின்று நிலை பெற்றுள்ள "இராஜராஜ சோழனின் சித்தப்பாவான உத்தம சோழனின் தந்தையான கண்டராதித்தன்" அவன் பெயரில் "இராச கேசரிப் பெருவழி" என்று பெயரிடப் பட்டுள்ளது.

இராசராசன் காலத்தில் தமிழ் எழுத்துக்கள் உருமாறி வட்டெழுத்துக்களாக மாறிக் கொண்டிருந்தன. அதனைக் கட்டுப்படுத்தி தமிழகமெங்கும் தமிழ் வரிவடிவம் ஒரே மாதிரி அமையும் வண்ணம் அம்மன்னன் முயற்சித்ததாகத் தெரிகிறது. அதனை இங்குள்ள கல்வெட்டும் உணர்த்தும்.

வட்டெழுத்து, தமிழ் எழுத்து ஆகிய இரண்டிலும் பெரு வழியின் பெயர் எழுதப்பட்டுள்ளது. அத்துடன் வட்டெழுத்தில் ஒரு வெண்பாவும் வெட்டப்பட்டுள்ளது.

**தமிழ் எழுத்து**

ஸ்வஸ்த இராச கேசரிப் பெருவழி.

**வட்டெழுத்து**

ஸ்வஸ்த ஸ்ரீ இராச கேசரிப் பெருவழி.

திரு நிழலைப் பன்னா டிருஞ்சிருந்த மைப்ப
ஒரு நிழலிப் பய்ங்களன் பொங்கு—இரு நிழல்னல்
வாழியர்கோச் சோழன் வளங்கா விரிநாடன்
கோழியர் கோக் கண்டரதி [த் தன்]

**கண்டுபிடித்த வரலாறு**

உள்ளூர் இளைஞர்கள் சிலர் இக்கல்வெட்டைக் கண்டுள்ள னர். படிக்க இயலவில்லை. அறிஞர்கள் பலருக்கும் எழுதிச்

சலித்து விட்டனர். அந்தவகையில் புலவர் இராசுவுக்கும் ஒரு கடிதம் வந்தது. கோவைப் பழங்கலைப் பதிவு அலுவலர் திரு பூங்குன்றன் அவர்களுடன் அக்டோபர் மாதம் ஒருநாள் சென்று உள்ளூர் இளைஞர்களுடன் சென்று பார்த்துப் படித்துப் பேருவகை எய்தினர்.

தகவலை விரைந்து, தொல்லியல் துறை இயக்குநர் பண்டாரகர் நாகசாமி அவர்களுக்குத் தெரிவித்தனர். இயக்குநர் தக்க முறையில் அதனை உலகுக்கு அறிவித்தார். செய்தித் தாள்களில் வெளியாகின. வானொலி நிலையமும் அறிவித்தது.

தமிழகத் தொல்லியல் துறையின் அண்மைக் காலக் கண்டு பிடிப்புகளில் இது தலையாயதாகும்.

வட்டெழுத்தைப் படித்து அதனை வெண்பா உருவில் அமைத்தார். புலவர் இராசு. இதில் இன்னும் செப்பங்கள் செய்ய வேண்டியுள்ளது. பலரும் படிக்கப் படிக்கப் பழுதுகள் களைந்து தெளிவு பெறும் என்பது திண்ணம்.

தேனோலை எண் 23/1976

# சொக்கனேந்தல்

இடம் : ஈரோடு தாலூக்கா, பழமங்கலத்தின் கிழக்கே இட்டேறியில் உள்ள நடுகல்

'வாய்த்தபுகழ் மங்கலத்து வந்தெதிர்ந்த மாற்றலரைச்
சாய்த்தமகன் வென்ற சயம்பெருகச்—சீர்த்தபுகழ்
நிக்குவணம் கற்பொறிக்கப் பட்டான் கரையகுலச்
சொக்கனேந்த லேவுலகில் தான்.

இக்கற்பொறி இரட்சிப்பான் பாதம் என்தலைமேலே

பின் பக்கக் கல்லில், வீரன் உருவமும், பக்கக் கல்லில் எழுத்துக்களும், பக்கக் கற்களின் மேல் கூரைக்கல் போடப்பட்டுள்ளது. ''பீடும், பெருமையும் எழுதி என்பதற்கொப்ப அழகான பாடலால் அமைக்கப்பட்டுள்ளது. இதனைக் கண்டு இயக்குநருக்கு அறிவித்தவரும் புலவர் இராசுவே ஆவார். கொங்கு—நான்காம் தொகுதியில் புலவர் இராசுவின் ''நடுகல் வழிபாடு'' என்னும் கட்டுரை காண்க. இந்த ஆண்டு புலவர் தேர்வுக்குப் பாடமாகவும் உள்ளது.

தேனோலை எண் 24/1976

# பெருங்கதை

சிலப்பதிகாரத்திற்கு இணையாக வைத்து எண்ணப்படுவது பெருங்கதை. அதனை ஆக்கியோர் ‘‘கொங்குவேள்’’. அவர் வாழ்ந்தது விஜயமங்கலத்தில். அங்கு ஒரு அழகான வடமொழிக் கல்வெட்டினைப் புலவர் இராசு கண்டுபிடித்துள்ளார்.

ஸ்ரீ ப்ரகத் கதா லாவண்ய ரத் ப்ராதபஹ :

பெருங்கதையின் அழகிலும் பெருமையிலும் மூழ்கிக் கிடக்கிறது என்று பொருள். வாத்ய மண்டபத்தில் நன்கு தேய்த்து வழவழப் பாக்கிய கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. ஒரு ஓரத்தில் ஸ்வஸ்திக சின்னம் உள்ளது. இரண்டு முனைகளிலும் துளைகள் உள்ளன.

‘‘முக்குடை’’ என்னும் திங்களிதழில் கொடுமுடி ச. சண்முகனார் எழுதிய கட்டுரையில் வெளியிடப்பட்டுள்ளது.

இதே விஜயமங்கலத்தில் இதே சந்திரப் பிரபா தீர்த்தங்கரர் கோயிலின் கிழக்குச் சுவரில் உள்ள விஜயநகரக் காலத்து கல் வெட்டு ஒன்று காண்க:

ஸ்வஸ்தஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் பாஷைக்குத்
தப்புவராயர் கண்டன் சமுத்திராதிபதி

ஸ்ரீ வீரப்ப உடையார் குமாரன் ஸ்ரீ வீர ஹரி ராய
உடைய தேவர்க்குச் செல்லா நின்ற

நந்தன சம்வத்சரத்து ஐப்பசி மாதத்து இருபத்
தைஞ்சாந் தியதி சதா ஹமை

ஸ்வர்க்க லோகம் ஆன கோட்டை சூழ்ந்த
நாட்டில் வடபரிசார நாடு வெங்கரை நாடு
நாலூர்ப் பற்றும்

பேரூர் நாடு குறுப்பு நாடு வீரசோழ வளநாடும்
ஆக இந்த நாட்டு நாட்டவரோம் குறுப்பு
நாட்டு விசைய

மங்கலத்து நாயனுர் அணியாதழகியார்க்கும்
சாதனம் பண்ணிக் குடுத்த பரிசாவது இந்த
நாயி

ஞர்க்குப் பூசை புனஸ்காரத்துக்கும் அழிவு
தொறுசைக்குமாகக் குறுப்பு நாட்டுச்
செங்கற் பள்ளி

ஊர்க் கொளமும்.........

குறிப்பு : விஜயமங்கலம் பற்றி "சதா ஹம ஸ்வர்க்க லோகம் ஆன" என்ற குறிப்பு மகிழத் தக்கது. தீர்த்தங்கரை "அணியாத அழகியார்" என்பதும் போற்றத் தக்கது.

# தலைவிலை

ஈரோடு தாலூகா—சாத்தம்பூர்—வல்லாள ஈசுவரன் கோயில் அம்மன் சந்நிதி நிலைகல்

ஸ்வஸ்தஸ்ரீ நன்மங்கலஞ் சிறக்கஸ்ரீ
குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு
9 வது பூந்துறை நாட்டோம் சாத்தனூர்க்
கெங்களில் அமைவு குடுத்த பரிசாவது
எங்களஞ் சாத்தனூரோ டொத்த வூராவ
தாகவும் எங்களொ பாதிசாரிகையும்
மற்றும் பெறுவந பெறுவாராகவும்
இவர்களை அழிபிழை அநியாயஞ் செய்தாரை
வெட்டுதல் குத்துதல் செய்தால் அவனுக்குத்
தண்டந் தலைவிலையில்லையாக இப்படிக் கமைந்
திக்கல் வெட்டிக் கொடுத்தோம் நாட்டோஞ்
சாத்தனூர்க்குளே யழிவு செய்தவன் தன்
வழியேழெச்சம் அறுவான்.

குறிப்பு: இடைக் காலத்தில் நீதி முறை பற்றிய செய்தி தரும் அருமை வாய்ந்த கல்வெட்டு. கொலைக் குற்றத்திற்கு தண்டனை, தூக்கில் போட்டு விடுவதுதான். குற்றம் செய்தவன் தன் தலையை விலையாகத் தரவேண்டும்.

"அழிபிழை அநியாயம்" செய்தவர்களை "வெட்டுதல், குத்துதல்" செய்யாமல் அதற்குத் தண்டனை அல்ல என்று பூந்துறை நாட்டார் முடிவு செய்கின்றனர்.

# கண்மாளர்

வெள்ளோடு சர்வலிங்கேஸ்வரன் கோயில் கிழக்குச் சுவர் கல்வெட்டு:—

சுபமஸ்து ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு 15 ஆவது சுபமஸ்து ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் கோனேரி மேல் கொண்டான் காங்கயநாடும் பூந்துறைநாடும் உள்ளிட்ட பற்றில் கண்மாளர்க்குத் தங்களுக்கு நன்மை தின்மைக்குப் பதினைந்தாவது ஆடி மாதம் முதல் இரட்டைச் சங்கு ஊதிப் பேரிகை உள்ளிட்டன கொட்டிவித்துக் கொள்ளவும் தங்கள் வீடுகளுக்குச் சாந்திட்டுக் கொள்ளவும் புறப்பட வேண்டுமிடங் களுக்குப் பாதரட்சை கோத்துக் கொள்ளவும் சொன்னோம். இப்படிக்கு நம்மோலை பிடிபாடாகக் கொண்டு ஆசந்திராதித்த வரை செல்வதாகத் தங்களுக்கு வேண்டுமிடங்களிலே கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க. யாண்டு 15 ஆவது நாள் 129 இவை காலிங்கராயன் எழுத்து உ.

குறிப்பு: இதே கல்வெட்டு பேரூர், பசுபதீஸ்வரர் ஆலயத் தின் மண்டபத்து வடக்குச் சுவரிலும் உள்ளது. இதில் "காங்கய நாடும் பூந்துறை நாடும் உள்ளிட்ட பற்றில்" என்பதற்குப் பதிலாக "தெந்கொங்கில்" என வருகிறது. எனவே இந்த உரிமைகளைக் கொங்கு நாடு முழுவதும் விஸ்தரித்துள்ளமை புலனாகும். (காண்க AR 562/1893)

# செம்படவன் பிள்ளை

சர்க்கார் பெரியபாளையம் சுக்ரீவேசுவரர் கோயில் வடக்குச் சுவர் கல்வெட்டு

ஸ்வஸ்தஸ்ரீ

சண்டீஸ் வரனோலை சாகரஞ்சூழ் வையகத்துக்
கண்டீஸ்வரன் கருமம் ஆராய்க—பண்டே
அறஞ்செய்தான் செய்தான் அறங்காத்தான் பாதம்
திறம்பாமல் சென்னிமேல் வைத்து.
அருளால் ஆதி சண்டேஸ்வரன் ஆதேசம்
நம்பிள்ளை சுந்தர பாண்டிய

தேவர்க்கு யாண்டு 22 ஆவது பேருர் நாட்டில்
வெள்ளலூரில் செம்படவன் பிள்ளை
யானுக்கு நம் ஓலை குடுத்த பரிசாவது
வாயறைக்கா நாட்டில் சூரலூர் ஆன
சுந்தரபாண்டிய நல்லூர் குரக்குத்தளி
ஆளுடைய நாயனார் திருநாமத்துக்காணிக்கு
இவ்வூர்

அணையும் காலும் பார்த்து அணையிலுள்ள நீர்
கீழையில் விழாமல் பார்த்து குளத்தில்
ஒதுக்கி அணையிலும் குளத்திலும் உள்ள
குறையுள்ளது உலாவிப் பார்த்து குறையுள்
ளது தானத்தார்க்கும் ஊரார்க்கும் சொல்லி
ஊரிலுள்ள வெட்டியாளும் ஏற்றி அணைக்
கோட்டையும் வைத்து

பாத்துப் போதுவானாகவும் இப்படிக்கு மேலைப் பற்றில்
ஒரு மாச்செய் இறையிலி பெற்று உண்டு செய்வானாகவும்
இவ்வூரில் பயிர்

ஏறின நிலத்துக்குத் தூணி நானாழி நெல்லும்
பெற்றுப் போதுவானாகவும் நிலம் உழும்குடி

தூணி நெல்லுக்கு அரியுங்கட்டிக் கொள்ளுவானாக
வும் இப்படி அனுபவித்துப் போதுவானாகவும்

தானத்தார்க்கு ஏற

செலவறுப்பானாகவும் குளம் மீன் படுக்கும் போது
குளத்தில் மீன் சிலவறப் படுக்கும் உண்டான
தானத்தார்க்கு நிச்சயித்தபடி கரித்த வீரகரி
யிட்டுப் போதுவானாகவும் இவ்வூர் நான்
கெல்லையும் உட்பட அணையும்

குளமும் இம்மரியாதி பெற்று இம்மரியாதி பிடிபாடு
செய்து அனுபவிப்பானாகவும் இப்படிக்கு இவன்
மக்க மக்கள் சந்திராதித்தர் செய்வதாகக்
கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ள
நம்மோலை குடுத்தோம்.

அருளால் ஆதி சண்டேஸ்வரன் சிரி கரணத்தான்
எழுத்து இவை வீர ராஜேந்திர சோழச் சக்ர
வர்த்தி எழுத்து.

குறிப்பு: இக்கல்வெட்டின் முதலில் வரும் வெண்பாவைக் காண்க. பேரூர் பசுபதீஸ்வரர் கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டும் இவ்வெண்பாவில் தொடங்குகிறது. (AR567/1893).

ஏரியைப் பாதுகாக்கும் பொறுப்பு மீன் பிடிக்கும் செம்படவன் வசம் ஒப்படைக்கப்படுகிறது. அதற்கு மானியமும் வழங்கப்படுகிறது. மீன் பிடிக்கும் தொழில் செய்யும்போதே குளம் காக்க வருமானமும் தரப்படுகிறது.

தேனோலை எண் 25/1976

# வேட்கோவர்

பெருந்தலையூர் திருமகிழ்வனமுடையார் கோயில் கிழக்குச் சுவர்க் கல்வெட்டு.

ஸ்வஸ்த ஸ்ரீஎம்மண்டலமும் கொண்டருளிய சுந்தர பாண்டிய தேவர்க்கு யாண்டு இருபத்து மூன் றுவது கார்த்திகை.

மாதத்துப் பன்னிரண்டாம் நாள் பூந்துறை நாட்டுப் பூந்துறையில் இருக்கும் வேட்கோவரில் முன்னாள் எங்கள் பாட்டன் காஞ்சிக் கூவ

ல் நாட்டிலும் வடகரை நாட்டிலும் சீதனம் பெற்றுடைய காணிகளில் இந்நாட்டுக் காணிகளில் பெ

ருந்தலையூர் வேட்கோவரில் வீதிப் பெரிய தேவனான பொன்னம்பலக் கூத்தனுக்கு,இக்கோயில் காணி

யுடைய சிவ பிராமணரில் காசிப கோத்திரத்துப் பிள்ளைக் கோவன் வினாயக பட்டனும் இக்கோத்

திரத்துப் பெரிய கோவன் பெரிய பட்டன் இவ்விருவோம் கல்வெட்டிக் குடுத்த பரிசா வது உடை

யார் திரு மகிழ்வனமுடைய நாயனார் கோயிலுக்கு சந்தியாதீபம் ஒரு விளக்கு எரிக்கக் கடவதாக ந

ாங்கள் வாங்கின பணம் பத்து இவ்விளக்கு சந்திராதித்தவரை எரிக்கக் கடவதாகவும் இவ்விளக்கு

குடமும் குச்சியும் கொண்டு கோயில் புகுவான்
எரிக்கக்கடவன். இது பன்மாகேஸ்வரர்
ரக்ஷை.

குறிப்பு : வீதிப் பெரிய தேவனான பொன்னம்பலக் கூத்தன் என்ற வேட்கோவரிடம் பணம் பெற்றுக் கொண்ட சில பிராமணர், அதற்கு வட்டியாக சந்தியா தீபம் ஏற்றும் பொறுப்பை மேற் கொண்டு கல்வெட்டித் தருகின்றன்.

குடமும், குச்சியும் என்பது தீர்த்தமும் தர்ப்பையும்.

AR 370/1955 இல் படி எடுக்கப்பட்டுள்ளது. இன்னும் வாசகம் தொல்லெழுத்துத் துறையினர் வெளியிடவில்லை. புலவர் இராசு படித்து அனுப்ப "இளங்கோ" திங்களிதழில் வெளி யாயிற்று.

# சோழன் பறையன்

**திருமுருகன் பூண்டி முருகநாதர் கோயில் வடக்குச் சுவரில் உள்ள கல்வெட்டு.**

ஸ்வஸ்தி ஶ்ரீ விக்ரம சோழ தேவற்குத் திரு
வெழுத்திட்டுச் செல்லாநின்ற திரு ந
ல்லியாண்டு யக(11)வதுக் கெதிராவது பு
ரட்டாதி மாதம் யக(18)தியதி நாயற்றுக்
கிழமை முதல் வாயறை
க்கால் நாட்டுப் பல்லவிடத்தில்
வெள்ளாழந் மாப்புள்ளிகளி
ல் சோழந் பறையநாந தநபா
லன்நேன் ஆளுடையார் திருமுரு
கன் பூண்டி யாளுடையார் கோயில்
நாயகற்கு நாளொன்றுக்கு நாழிபரிசி
அமுதுபடி செல்வதாக இக்கோயி
ற்காணியுடைய சிவப்ராமணர் காஸ்ய
ப கோத்ரத்து அவிநாசி முருகனான சீகா
ழி யாநும் அவிநாசி முருகன் உள்ளிட்டா
ரும் சாந்தாரைக் காப்பான் திருவேக
ம்ப முடையானும் இவ்வனை வோங்க
ள் இவ்வச்சுப் பத்துக் கொண்டு எங்
கள் மக்கள் மக்கள் குடங்கொ(ண்)டு கே
ாயில் புகுவாந். சந்திராதித்தவ(ரை)ற் செல்
வதாக. இது பந்மாஹேஸ்வர ரக்ஷை.

குறிப்பு : (AR எண்கள் 577/1893) பூசை செய்வோரில் சீர்காழியைச் சேர்ந்த ஒருவன், அவிநாசி முருகன் என்ற பெயரில் இருக்கின்றான். பெரும்பாலான கல்வெட்டுகளிலிருந்து அறியும் செய்தி யாதெனின், விளக்கு எரிக்க, அமுதுபடி போன்ற பூசைக் காரியங்களுக்குப் பொன் முதலாக வைப்போர் அதனைப் பூசை செய்யும் பிராமணரிடமே கொடுத்து விடுகின்றனர். தான் பெறும் பொன்னுக்கு வட்டியாக, சந்திர சூரியன் உள்ளவரை, தமது மக்கள், பேரன், தொடர்ந்த சந்ததி காலங்களிலும் தொடர்ந்து அத்தர்மத்தைச் செய்வதாக உறுதி அளித்து, கல்லில் வெட்டி வைத்து விடுகின்றனர். கல் இன்னும் இருக்கிறது. பொன் போன இடம்தான் தெரியவில்லை,

# வெள்ளாளன் காவன்

கொளுஞ்சிவாடி, சொக்கநாதர் கோயில் கதவின் நிலவு கால் ஒன்றில் உள்ளது.

கோவிராச கேசரி பற்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் சிரி சுன்(ந்)திர பாண்டிய தேவற்கு யாண்டு உ௰டு (25)வது இராசராச புத்திரல் வெள்ளாந் காவன் மனைக்கிழத்தி சடையம்மையேன்.

இவ்வாசல் திருநிலைக் கால் விரண்டும் என் தன்மம்.

குறிப்பு : இன்றைய தாராபுரம் அன்று இராசராசபுரம் என வழங்கி வந்தது. கோயில் கட்டுவதற்குப் பெண்களும் கொடை அளித்து, அதனைத் தம் பெயரால் கல்லில் வெட்டியும் வைத்துள்ளனர். தம் பெயர் சொல்லாமல் இன்னார் மனைவி (காவன் மனைவி) என்று சொல்கிறார். காலம், யார், தர்மம் என்றபடி வாக்கியம் தெளிவாக அமைந்துள்ளது காண்க. (AR 580/1893

# போத்தன் செய்யான்

ஈரோடு தாலூக்கா—ஈங்கூர் குட்டத் தோட்டம்
ஐயனார் சிலை அருகே உள்ள கல்வெட்டு:

ஸ்ரீ நன்மங்
களஞ் சிறக்க
ஸ்ரீ கொலோத்
துங்க சோழதே
வர்க்குத் திருவெ
ழுத்திட்டுச் செல்
லா நின்ற திருநல்வி
யாண்டு ஏழாவது மேல்
கரைப் பூந்துறை நாட்டு
ஈங்கை யூரிலிருக்குங்
காவிலன் குறும்பில்லரில்
போத்தன் செய்யானை
குலோத்துங்கப் பல்லவரையனேன்
அய்யநாரை எழுந்தருளுவித்த தன்மம்.

குறிப்பு: ஈங்கூரில் அய்யநார் சிலை அமைத்த செய்தி உள்ளது. குறும்பர் இனத்தைச் சேர்ந்தவன் போத்தன் செய்யான். அவனது பட்டப் பெயர் குலோத்துங்கப் பல்லவரையன். அக்கால அதிகாரிகள் தமது அதிகாரப் பெயரில், தமது மன்னனின் பெயரை சேர்த்துக் கொள்ளும் பழக்கம் இருந்தது.

புலவர் இராசு படித்து அனுப்ப "கொங்கு" இதழில் வெளியாகியுள்ளது.

# கணபதியாழ்வி

**பல்லடம் தாலூக்கா**
**பெருமாநல்லூர்—உத்தம சோழீசுவரர் கோயில்**
**வடக்குச் சுவர்க் கல்வெட்டு**

**ஸ்வஸ்தஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு நாலாவது குறுப்**

**புநாட்டில் செங்கற்பள்ளியான ஆறபுத்ற கூட**
**நல்லூர் இருக்கும் பிராமணன் கவுசிய கோத்திர்த்தில் இனி**
**யான் கரிய பிள்ளையான வீர ராசேந்திர பிரம்மராயன் கி**
**ழத்தி கணவதியாழ்வியேன் பெரும்பழாநில் நாயனர் உத்**
**தம சோழிசுர முடையாற்கு நான் வைச்ச திருவிளக்குச் சந்தி**
**யாதீபம் விளக்கு ஒன்றுக்குக் குடுத்த அச்சு பழஞ்சலாகை**
**ஒன்றும் பெரும்பழாநில் இருக்கும் சிவப்பிராமணன்**
**காசுப கோத்திரத்தில் பெரியான் அவிநாசியான் திழிவீதிப் பெரு**
**மாள் இவ்வச்சு ஒன்றும் கொண்டு சந்திராதித்தவல் இவ்விளக்கு**
**செலுத்துவோமாகவும் குடங்கொண்டு கோயில் புகுவான்**
**சந்திராதித்தவல் செலுத்துவானாக, இது பன்மகேஸ்வரர் ரட்சை 2.**

குறிப்பு : வீரராசேந்திரன் காலக் கல்வெட்டு, செங்கப்பள்ளி, இனியான் கரிய பிள்ளை என்பவனின் மனைவி கணபதி யாழ்வி. அச்சு பழஞ்சலாகை என்பது அக்கால நாணயம். திருவீதிப் பெருமாள் என்ற பிராமணன், ஒரு அச்சு பெற்றுக் கொண்டு அதற்கு திருவிளக்கு ஏற்ற ஒப்புகிறாள்.

# கோ ரவி கோதை

ஈரோடு அர்த்த கபாலீஸ்வரர் கோயில் சுவரில் உள்ளது.

ஸ்ரீ கோ. ரவி கோதைக்குத் தன் பலம் நூறாயிரத் தாட்டைக்கு திருவெழுத்திட்டுச் செல்லா நின்ற யாண்டு மேல் இருபத் திரண்டாவது.

இவ்வாண்டு ஈரோட்டில் திருத் தொண்டீஸ்வரமுடைய பிடா ரற்கு, வடகரை நாட்டில் அந்தியூரில் பெருங்குளம், கீழ்பாற் கெல்லை புன்பாளுஞ் சிற்றுளியும், தென்பாற் கெல்லை நீர்க் கிசைந்த நெல்விளை வளவும், மேற்பாற் கெல்லை தேவதானப் புன் புலமும் அதுக்குப் புளியம்பாகப்பட வடபாற் கெல்லை முன் குளமும், பின் குளமும்.

இவ்விசைந்த பெருநான் கெல்லைக் குட்பட்ட நிலமும் மேனோக்கிய மரமுங் கீணோக்கிய கிணறும், உடும்போடி ஆமை தவழு நிலங் கற்றுப் புல்போகா முற்றூட்டும் திருத்தொண்டீஸ்வர முடைய பிடாரற்கு அவித்ரி அர்ச்சனைத் திருநாளுக்கு இத்தன் மஞ் செய்து குடுத்தேன் கோ ரவி கோதை யேன்

இப்படிக்கு காஞ்சித் துண்டத்து ஈரோட்டு தாநிக சிவப்ரா மணரில் ஆலம்பாய கோத்ரத்து நயினா நல்லபட்டர் மகன்பவ டைப் பெருமாள் எழுத்து.

காத்தானடி எந் தலை மேலது.<br>
இது இறக்குவான் வழி ஏழச்ச(ம்) மொழியாம லறுவான்<br>
இது பன்மாஹேஸ்வர ரக்ஷை.

குறிப்பு: உடும்போடி ஆமை தவழும் நிலம், கற்றுப் புல் போகா முற்றூட்டு போன்ற தொடர்களைக் காண்க. (AR 15/1891)

# கோவம்புத்தூர்

**கோவை தாலூக்கா – கோவை நகரம் சங்கீஸ்வரர் (சங்கமேஸ்வரர்) வடக்குச் சுவர்**

ஸ்வஸ்திஸ்ரீ கோ நேரின்மை கொண்டானுன
அதிராஜ ராஜ கண்டிய தேவருக்குக் குடுத்தபடி
யாவது பேரூர் நாட்டு பெருமாடக நாச்சி
நல்லூரில் நீர் நிலன் ஸ்ரீமன் ராஜ வாய்க்
காலும் காணியும் இக்கண்ணுறு ஊரும்...
மேற்குடைய நிலம் முக்காணியும் சிவபாத
சேகர மண்ணறையில் பற்று...கிழக்குடைய
நிலம் அரைமாவும் ஆக நிலம்...நாற்
கழஞ்சும் நம் சா...லே ஒடுக்கினமையில்
இந்நெல் விதை நாற்கலமும் கோவம்
புத்தூர் ஆன வீரகேரள நல்லூர்
ஆளுடையார் சங்கீஸ்வரமுடையார் கோயி
லிலே உமா சக்த திரு நெ...... சந்திராதித்
தவல் செல்வதாக செம்பிலும் சிலையி
லும் வெட்டுவிக்கப் பெறுவாளுகவும்
இந்நிலத்தால் இறை புரவு சித்தாயம்
எலவை உகவை மற்றும் எப்பேர்ப்பட்ட
தும் கொள்ளக் குடுத்தோம். இக்கோயிலில்
சிவ பிராமணர் குடங்கொண்டு (கோயில் உள்
புகுவார்)

குறிப்பு: கோயம்புத்தூரின் வேறு பெயர் வீர கேரள நல்லூர். தானமாக விட்ட இந்த நிலம் எங்கே உள்ளதெனக் கண்டுபிடித்திடுங்கள்!

# வாரண வாசி

இடம் :—ஈரோடு தாலூக்கா துடுப்பதி விசுவநாத ஈசுவரர் கோயில் கருவறைப் பட்டிகைவரி வடபுறம் உள்ள கல்வெட்டு,

அரசன் : மைசூர் கிருஷ்ணராஜ உடையார்

சிவமயம் ஸ்வஸ்திஸ்ரீமன் மகா மண்டலேசுவரன்
மகாசுவாமி கிருஷ்ணராஜ உடையார் அவர்கள்
காரியத்துக்குக் கர்த்தரான மகாராஜ ஸ்ரீ தளவாய்
நஞ்சராசய்யன் அவர்கள் கனுவாய் சீர்மையில்
சுபைதார் ரங்கய்யனவர்கள் சபையில் சாலிவாகன
சகாப்தம் 1666 கலியுக சகாப்தம் 4845க்கு
மேல் செல்லாநின்ற ரத்தாட்சி வருடம் பங்குனி
மாதம் 8ஆம் தேதி புத வாரமும் பஞ்சமியும்
உத்தர நட்சத்திரமும் இச்சாலி நாமயோகமும் பால
வாகரணமும் பெற்ற சுபதினத்தில் குறுப்ப நாட்டில்
விசைய மங்கைக்குச் சேர்ந்த துடுப்பூதி இவ்வூர்
காணியாளரில் வாரணவாசிக் கவுண்டன் பங்கில்
வாரண வாசிக் கவுண்டன் மகன் குமாரசாமிக்கவுண்
டன் குமாரசாமிக் கவுண்டன் மகன் குமார வேலப்ப
கவுண்டன் காசி விசுவேஸ்வர சுவாமியார்
விசாலாட்சி அம்மன் மற்றுமுள்ள பரிவார
தேவதையளுக்கும் மண்டப கோபுரம்
உண்டு பண்ணி படித்தரம் தீபாராதனை
நடக்கும் படிக்கும் குமாரசாமிக் கவுண்டன் மகன்
குமார வேலப்ப கவுண்டன் உபயம். உ.
இவன் கோத்திரம் பூந்தை.

**தேனோலை எண் 27/1976**

# கெம்பைய நாய்க்கர்

பவானி தாலூக்கா — ஊராட்சிக்கோட்டை புலிக்குத்தி நடுகல்

பசவேசர் துணை
ஆனந்த வருஷம் சித்
திரை மாதம் 15 தியதி ஊ
ராள்ச்சிக் கோட்டை ஆள்
கை கெம்பை நாயக்க
ர் புலி குத்திப் பட்டிறந்தகா
ணியாட்சி அப்பைய நாயக்
கர்க் கிந்த மானுவக் காடும் யூ
ராள்ச்சியும் கொடுத்தோம்.

குறிப்பு : பவானிக் கருகில் உள்ள ஊராட்சிக் கோட்டையில் கெம்பைய நாயக்கர், ஒரு புலியைக் கொன்று தானும் அப்போரில் இறந்தார். அதற்காக அவரது வாரிசான அப்பைய நாய்க்கருக்கு மானியமும், ஊராளும் உரிமையும் கொடுக்கின்றனர். ஒரு வீரன் புலியைக் குத்தும் வடிவில் புடைப்புச் சிற்பம் உள்ளது.

புலவர் இராசு படித்து அனுப்ப கொங்கு இதழில் வெளியாகியுள்ளது.

# இருபதடிக் கோல்

ஈரோடு தாலூகா முருங்கத் தொழு பிரமேஸ்வரர் கோயிலில் விநாயகர் கோயில் :—

ஸ்வஸ்திஸ்ரீ சுந்தர பாண்டிய தேவர்க்கு யாண்டு
ஏழாவது சித்திரை மாதம் பூந்துறை நாட்டுப்
பெருந்தொழுவு ஊரும் ஊராளிகளும்......நம்பி
யானும் மங்கை...

க்கூத்தனும் கொன்றைவார் சடையனும் பெரிய பிள்ளையும்
பொல்லாத பிள்ளையும் இந்த ஐய்வரும் தங்கள்
தன்மமாக பிள்ளையாரையும் ஏறியருளப் பண்ணிக்
கோவிலுஞ் செய்வித்தேன்...

பக்கல் இருபது பணம் வாங்கி உடையார் கோயிலில்
திருப்படிக்கட்டு மேலூர்க் குளத்திலே இருபதடிக்
கோலாலே முப்பது குழியால் ஒரு கழனியாட்டுக்
கொடுத்தோம். இக்கழனி பயிர் செய்து...திக்குக்கொங்

கால் இருகலனே தூணிநெல் ஆண்டுவரை அளந்து
குடும்பமாகவும் குளம் எத்தாத நாள் இருகலனே
தூணித் தினை கொடுப்போமாகவும் இந்த அமுதுபடி
இவ்வூரிலே இருந்தார் ஒருவர் சந்திராதித்த வரை
அளந்துவரக் கடவதாகவும் இப்படி

சம்மதித்து இக்கல்வெட்டிக் கொடுத்தோம் ஊரும் ஊராளிக
ளோம் மேற்படி நாள் இவ்வூர்க்கோயிலில் காணி
உடைய தேவகைமிகளில் கௌசிய கோத்திரத்து
உய்யவந்த பட்டன் ஆன சந்திரநம்பியும் தில்லைக்
கூத்தன் மன்றுளாடு நம்

பியும் இப்பிள்ளையார் கோயிலுக்கு சந்தியா தீபம்
ஒன்றுக்கு மேற்படியார் ஐவர் மக்களும்
பற்றின பொன் கழஞ்சு இச்சந்தியா தீபம்

சந்திராதித்தவரை குடங்கொண்டு கோயில் புகுவார்
இடக்கடவதாகவும் இத்தன் மங்களை

அழிக்குமவன் வழி ஏழெச்சம் அறுவ்வான். இவை
பன்மாகேஸ்வரர் ரட்சை.

குறிப்பு: முகத்தல் அளவைக்கான வள்ளம் ஒன்றின் பெயர் "கொங்கு." அதனால் இரண்டு கலம் தூணி நெல் ஆண்டு ஒன்றுக்கு அளக்க வேண்டுமாம்.

நிலம் அளக்க 20 அடிக் கோல் பயன்பட்டுள்ளது. ஒரு அடி என்பது தற்காலத்து எட்டே கால் அங்குலம் அதனால் இப் பெருங் கோல் நீளம் 13'-9." ஒரு கோல் நீளம், ஒரு கோல் அகலம் கொண்டது ஒரு குழி. அவ்வாறு முப்பது குழி அளந்து கொடுக்கப் பட்டுள்ளது.

தேனோலை எண் 28/1976

# கைய்பீது

## மேட்டுப் புத்தூர் ஜைன பஸ்தி தேவஸ்தானக் கைய்பீது

க்கொயமுத்தூரு சில்லா பெருந்தொரெ தாலூகா விசயமங்கல முட்டா மவுசே மேட்டுப்புத்தூரு செயினு மதம் பஸ்தி கோயில் தேவஸ்தானம் ஸ்தானிகன் கமலய்யனெளுதிக் குடுத்த கையிபிய்து

யென்னவென்றால் பூர்வத்தில் சந்திறனாத சுவாமிக்கு ஆதி இசுவறரென்று பேருண்டு, கலியுகத்துக்கு பூர்வத்திலே உண்டான கோயில்-க-கலியுக சகாப்தம் அறனூறு வறுசத்தில் மதுரை சமஸ் தான புதியில் பிரபுத்துவம் பண்ணப்பட்ட சாமுண்ட ராயரெங்குறவற் சீறனோ உத்தாரணம் பண்ணி விச்சாற்

இந்தக் கோவிலுக்கு ஆகேதி சத்தியமங்கலம் தாலூக்காவுக்குச் சேர்ந்த செங்கப்பள்ளிக்கிராமக் கர்த்தர் துறைத்தனத்து வரைக்கும் சருவ மான்னியமாய்ச் சிறிதுநாள் வரைக்கும் மான்னியமாய் நடந்து வந்தது. அதுக்கு மேல் மயிசூறு சமஸ்தானத்தில்க் கர்த்தர் துரைத் தனத்தில்ச் சாவடி தேவஸ்தானங்கள் சப்த்தி யாகிற முன்னுக்கு மேல்படி தேவஸ்தானத்துக்கு நடந்து வந்த செங்கப்பள்ளி கிராமம் சப்த்தி யாகிப் போச்சுது.

அதுக்குமேல் டீபூ சுலுதான் துரைத்தனத்துப் பரியந்தம் செங்கல்ப் பள்ளியில் அன்ம்பது வள்ளம் பூமியும் பெருந்தொரெ தாலூக்காவுக்குச் சேர்ந்த விசயபுறி கிராமத்திலே முப்பது வள்ள பூமியும் நடந்து வந்தது. அதுக்குமேல் கும்பினியாரது துரைத்

தனத்தில் சித்தார்த்தி வருஷத்திலே மேலே
எழுதிய எண்பது வள்ளமும் மான்னியமாய்
நடந்தது. இந்தக் கோவிலுக்குப் பிரகாரம்
கிழக்கு மேற்கு 228 அடி. தென்வ்டக்கு
159 அடி. இதுக்கு உள்ளாக இருக்கப்பட்ட
மண்டபம் கெருப்பக்கிரகம் சதுரச் சதுரம்
7½ தூரத்துக்குச் சதுரம் அடி 8 அர்த்த
மண்டபம் இனிமேல் மகாம்மண்டபம் சதுரத்துக்கு சதுரம்
அடி 14 நர்த்தமண்டபம் அடி 16 வாத்திய
மண்டபம் கிழக்கு மேக்கு அடி அகலம்
18 தெற்கு வடக்கு நீளம் அடி 24
இப்படியாகப்பட்ட மண்டபத்தில் ஒசரம்
நாலு பக்கத்திலேயும் அடுக்கியிருக்கப்பட்ட
சிலா விக்கிரகங்கள் நாபி மகாராசர் க.
மருதேவி அம்மன் க. சாமரேந்திரர் உ.
அதிலே வேதித்து இருக்கப்பட்ட மண்டபம் க.
தேவேந்திரர் ஆனெ உ. இராமசாமி லட்சு
மணப் பெருமாள் உ. பஞ்ச பாண்டவர்கள்
ரு. தொரொபதி க. பிரமன் விஷ்ணு உ
ருத்திரன் மும்மூர்த்திகள் 3. உதய சந்திர
கிரி பர்வத சுவரூபம் க. அசோக விருட்சம்
போலேயும் க. பண்ணி வைத்து அவ்விடத்திலே
தர்ம்ம தேவதை அம்மன் க சிங்க வாகனத்
தில் மேல் க குழந்தை 2 அபிநந்த
நாச்சாறு க சரசுவதியம்மன் க இப்படிப்
பட்ட விக்கிரகங்கள் 147 கோவில் கோபுரத்
தின் மேல் அநேகங்கள் விக்கிரகங்கள்
இருக்கின்றன.

குறிப்பு: மெக்கன்சி என்ற ஆங்கிலேயர் இஞ்சினீயராக இருந்தார். அளவைத் துறையின் தலைமை யேற்று எல்லா இடங்களிலும் சென்றார். சென்ற இடங்களிலெல்லாம். அங்குள்ளோரிடம் அறிக்கை எழுதி தரச்சொல்லி வாங்கினார். அவை கைபீது எனப்படும். அதில் ஒன்று தான் மேலே உள்ள கைபீது.

இது போன்ற வரலாற்றிற்கு உதவுகிற கைபீதுகள், நூற்றுக் கணக்கில், சென்னையில் உள்ள பழஞ்சுவடிக் கீழ்த்திசை நூலகத்தில் உள்ளன. அவற்றைப் படிப்பாரும் ஆராய்வாரும் இல்லை.

ஒவ்வொரு ஊரினரும் தத்தம் ஊர்கள் பற்றிய செய்திகளை ஆராய்வது அவர்களது கடமையாம்.

**தேனோலை எண் 29/1976**

# துறூறி துரை

ஈரோடு தாலூக்கா காலிங்கராயன் பாளையம் அருகே காலிங்கராயன் பாலத்தில் உள்ள கல்வெட்டு.

மகாராசஸ்ரீ கனம் பொருந்திய
கும்பினியாரவர்கள் நாளில்
ஜி. டி. துறூறி துரையவர்களுடைய
பிரின்சிபால் கலெக்டர் அதிகாரத்தில்
பேபர் துரையவர்கள்
சிவிலிஞ்சினீரில்
அசூர் மராமத்து
சூப்பரிண்டெண்டு
சுப்பராயர்னாலே யிந்த
பாலம் பாகல்வாடம் பூர்த்தியாய்
கட்டலாச்சுது

குறிப்பு: பவானி ஆறு காவிரியுடன் கலக்கு முன்னர் ஒரு அணை கட்டி, அதிலிருந்து காலிங்கராயன் வாய்க்கால் பிரிந்து செல்கிறது. G. D. Drury என்பவர் கோவையில் மாவட்ட ஆட்சியாளராக இருந்தபோது (1832-1841) பேபர் துரை சிவில் இஞ்சினியராக இருந்தார். சுப்பராயர் என்பவர் சூப்பரிண்டெண்டு ஆக இருந்தார். அப்போது ஈரோட்டில் கட்டிய பாலத்தில் உள்ள கல்வெட்டு.

# கிரயப் பத்திரம்

தமிழ்நாட்டில் காகிதப் புழக்கம், ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்துதான் பரவியிருந்தது என்றால் மிகையாகாது. கம்பெனி ஆட்சிக் காலத்திற்கு முன்பு ஆவணங்களெல்லாம் பனை ஓலையிலேயே எழுதப்பட்டன. அதே முறை ஆங்கில அரசாங்க காலத்திலும் தொடர்ந்து வந்துள்ளதற்கு ஒரு சான்று அண்மையில் கிடைத்து, முதன் முதலாக இப்போதுதான் வெளியிடப்படுகிறது.

ஒரு ஓலைச்சுவடி புலவர் ராசுவிடம் காண்பாரற்றுக் கிடந்தது. ஒரு நாள் தேடி எடுத்துப் பார்த்துப் பேருவகை கொண்டோம். அது ஒரு கிரயப் பத்திரம். அதில் அரசாங்க முத்திரை, நாலணு மதிப்புள்ள முத்திரை அழுத்தப்பட்டுள்ளது. முத்திரை வட்ட வடிவில் உள்ளது. ஒன்றுக்குள் ஒன்றாக மூன்று வட்டங்கள் உள்ளன. நடுவட்டத்தில் ஆங்கிலத்தில் Four Annas என்று வெளிவட்டத்தில் தமிழிலும், தெலுங்கிலும் "நாலணு" என்று எழுதப்பட்டுள்ளன. 1805 ஆம் வருஷம் எழுதப்பட்டிருக்கலாம். திருச்செங்கோடு வந்து தங்கி பிழை தீரப் படித்து உதவியவர்கள் இரா. பூங்குன்றன், புலவர். செ. இராசு ஆகியோர்.

# சிவகிரி கிரயப் பத்திரம்

பிலப வருஷம் பங்குனி மாதம் 23 சிவகிரி கிராமத்துக்குச் சேந்த லிங்க கவுண்டன் வலசுலே யிறுக்கும் சின்னணக் கவுண்டன் மகன் கறுமன்—லிங்கப்ப கவுண்டன்—காளி........

மகன் சின்னணக் கவுண்டன்—உங்கள் னாலு பேறுக்கும் ஷை யூர் சிவகிரிக்குச் சேந்த கிலக்குபாளையத்திலிருக்கும் அங்க நட்டுவன் மக்கள் ஆறுமுகம்— சுப்பன்...மறுத......

ய சிலாசாதீனப் பத்திறம் யென்னவென்றால் ஷை கிறாமத்தில் யெங்கள் பேறுலே பட்டயமாயிருக்கப்பட்ட 118 பாடைக்குளிக் காடு—உ றுமை எ: தறு: ரு

......103 பாடைக்குளிக் காட்டில் தோட்டம் ச தறு ரு. 5921 ஷை யிந்தவகை பூமியும் அதிலுள்ள கிணறும் துலை வாறி யெநு உள்பட ஷை பூமி......

......ட்டரி திரிச்சய முதலானதும்—யெப்பேற்ப் பட்டதும் உங்களுக்குச் சுத்த கிறயமாய் வித்தது. னாங்கள் வாங்கிக் கொண்டது. உங்களுக்குச் சுத்த காலக்

யினாலே ஷை பூமியும் ஷை கிணறும் யெண்ணெனனைக்கும் புத்தறர் புத்தறர் பறிபாலனமாய் நீங்களே அனுபவிச்சுக் கொள்ளவும்—ஷை பூமிக்கு நீங்க

யிறுக்கிற படிக்கி பட்டயஞ் செய்விச்சுக் கொண்டு சாகுபடி செய்து கொண்டு சற்காறுக்குள்ள கந்தாயமுஞ் செலுத்தி விச்சுக் கொண்டு-சுத்தக் கி

றையச் சாதீனப் பத்திறம்—ஆறுமுக கையினாட்டு, சுப்பீனட்டு......

பாளையம் பொங்காளியப்ப கவுண்டன் அறிவேன். முடக் குறிச்சி ம......

மறு பக்கம்

மருதன்—க—முத்தன்—க. யிவர்கள் பெறல். ஷை கிறாம...

ண சாசனம். காள கருமணன்—க. லிங்கப்ப கவுண்டன் —க—காளியப்ப கவுண்டன் மகன்......லிங்கப்ப கவுண்டன் மகன்.

யிவர்கள் னாலு பேருக்கும் ரூ. 100 கிறைய சாசனம் யெளுதிக் குடுத்தோம். யீறோடு தாலூகா தொம்பீசன் கடையில்......

அடியில் கையொப்பம் உள்ளது.

---

கருத்துக்கள் கூறுவோர்
சந்தா அனுப்புவோர்
புத்தகம் வேண்டுவோர்
எழுதுக:

ச பிரகதம்
4/11, 2nd சடைய படையாச்சி தெரு,
வேலூர் ரோடு,
திருச்செங்கோடு-637211

கிடைக்கும் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | மதுக்கரைப் பட்டயம் | ரூ. 3.00 |
| 2. | ஆய்வுத் தேன் | ரூ. 4.00 |
| 3. | பூர்வச் சக்கரவர்த்தி நாடகம் | ரூ. 10.00 |
| 4. | மெச்சும் பெருமாள் பாண்டியன் | ரூ. 5.00 |
| 5. | கொங்கு தொகுதிகள் 1971, 72, 73, 74, 75 | ரூ. 5.00 |

புத்துணர்வு பெற்ற புதுமைமிகு நாடு 1975-76

# இளைய பாரதத்தினாய் வா! வா!!

- அவசியப் பண்டங்கள் கன்ட்ரோல் விலையில் 10490 மாணவ விடுதிகளுக்குக் கொடுக்கப்படுகின்றன. இதனால் 9,56,000 மாணவ மாணவியர் பயன்பெறுகின்றனர்.

- குறைந்த விலையில் பாடப்புத்தகங்களும் நோட்டுப் புத்தகங்களும் கிடைக்கச் சலுகை அடிப்படையில் வெள்ளை அச்சுக் காகிதம் கொடுக்கப்படுகிறது. கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் 88600 புத்தக வங்கிகள் செயல்படுகின்றன.

- தொழிற் பயிற்சித் திட்டத்தின் கீழ் புதிதாக 103 வர்த்தகப் பிரிவுகளும் 216 தொழில்களும் சேர்க்கப் பட்டுள்ளன.

- இந்தத் தொழிற் பயிற்சித் திட்டத்தின் மூலம் 18,800 இடங்களைப் புதிதாகச் சேர்த்துள்ளதால் 1,33,000 ஆக உயர்ந்துள்ளது. இவற்றில் 1,28,000 இடங்களுக்குப் பயிற்சியாளர்கள் ஏற்கனவே அமர்த்தப்பட்டு விட்டனர். அதில் 28,000 (20 சதவிகிதம்) இடங்கள் ஷெட்யூல்டு ஜாதியினர், ஷெட்யூல்டு பழங்குடியினர், மற்றும் பிற்பட்ட சமூகத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

All kinds of types from Scooters to Tractor tyres
are retread most scientifically in our Modern Plant

GOVT. OR. MSS. LIBRARY
MADRAS
Date of Accession ... 18.2.1985 .....
Accession No.... 22344 .....
Section.. Tamil ..........
Ref.No.. T.4507 ..........

FOR QUICKER AND DEPENDABLE RETREADING

# The Anamallais Retreading Corporation

42, MOUNT ROAD – GUINDY
MADRAS - 600032
Dial : 431157 - 431200 - 432926

ஆசிரியர், வெளியிடுபவர்: ச. பிரகதம், சென்னை–600020
அச்சிட்டோர்: நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை–6000